8. அரசினர் தீர்மானம்
விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை நாளைக்கு ஒத்தி வைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, *31-3-1995* அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, 'ஆம்'

மறுப்போர் 'இல்லை' என்க, 'இல்லை'

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அத்தோடு திரு. இளம்வழுதி அவர்கள், இன்று சண்முகம் அவர்கள் பேசியதற்குப் பிறகு பேசுவதற்குப் பெயர் கொடுத்து நானும் அதற்குத் தயாராக இருந்தேன். திரு. தம்புசாமிக்கு முன்னால் அவர் பேச வேண்டியவர். எனவே இன்று அவர் இந்த வாய்ப்பை இழந்து விட்டுச் சென்றுவிட்ட காரணத்தால் நாளைக்கு அவருக்கு வாய்ப்புக் கிடையாது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை *(31-3-1995) 10.00* மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை *2.12* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

80. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் *7-10-1994* ஆம் நாளிட்ட *650* ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1971* ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *11/1971) 72 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

81. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. *(1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS